**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 6/2020**

**Deposition of Witnesses for PW2**

| Name | : | திரு.**அங்கீஸ்வரன்** | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **14.02.2023.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சேத்தூர் ஊரக காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.09.2019ம் தேதி நானும், முதல் நிலை காவலர் போத்தி, காவலர் முருகேசன் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் கஞ்சா விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தகுந்த உபகரணங்களுடன் புறப்பட்டு மதியம் 12.30 மணிக்கு சுந்தர்ராஜபுரம், மாசாணாகோவில் தெருவில் ரோந்து சுற்றி கண்காணித்து வந்தபோது அங்கு ரகசிய தகவலாளி தொலைபேசியில் சொன்ன அடையாளத்துடன் கூடிய பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த சுந்தர்ராஜபுரம், மாசாணாகோவில் தெருவை சேர்ந்த கணேசன் த/பெ.சீனியப்பன், என்பவர் கையில் தாமரை பூ கோல்டு நெய் கிச்சடி ரைஸ் என்ற எழுதப்பட்ட துணிப்பையுடன் நடந்து வந்தவர் எங்கள் போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் பயந்து திரும்ப சென்றவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து அவரிடம் சோதனை சம்மத கடிதம் பெற்று, அவர் வைத்திருந்த பையை சோதனை செய்த போது, அதில் விதை, காம்பு, இலை, தழைகளுடன் கூடிய கஞ்சா போன்ற வாசனையுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற திராசில் எடை போட்டு பார்த்தபோது சுமார் 2.100 கிராம் கஞ்சா இருந்தது. மேற்படி கஞ்சாவை விசாரித்தபோது உசிலம்பட்டி பக்கம் இனம் தெரியாத நபரிடம் விற்பனை செய்வதற்காக வாங்கி வந்ததாக சொன்னார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மனிதனின் மனநிலையை பாதிக்கக்கூடிய போதை பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி நபரை கைது செய்தும், மேற்படி கஞ்சாவை அத்தாட்சியில் கைப்பற்றியும், மேற்படி கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு அனுப்ப 100 கிராம் கஞ்சாவை தனியாகவும், மீதமுள்ள கஞ்சாவை தனியாகவும் தனித்தனியாக காக்கி கவரில் பொட்டலங்களாக மடித்து, எஸ்.ஹெச்.ஓ.சீல் வைத்தும், எதிரி மற்றும் சொத்துடன் மதியம் 2.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய கு.எண்.142/19, பிரிவ 8(c), r/w 20(b)(ii)(B) NDPS Act-ன் படி வழக்கு பதிவு

செய்து சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சோதனை சம்மத கடிதம் கார்பன் நகல் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(அ.த.சா.ஆ.3 அசல் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

**எதிரி தரப்பில் கு.வி.:-**

ரகசிய தகவலை எழுத்துப்பூர்வமாக எழுதி உயர்அதிகாரிக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. மாசாணாகோவில் தெரு ஒரு பெரிய ஏரியா ஆகும். சுமார் 100 வீடுகள் இருக்கும். எதிரியை எந்த இடத்தில் பிடித்தோம் என்று குறிப்பிட்டு எந்த ஆவணத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 161 வாக்குமூலத்தில், எதிரிக்கு சோதனை சம்மத கடிதம் குறித்து சொல்லியுள்ளேன். சோதனை சம்மத கடிதம் கார்பன் காப்பி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. கணினியில் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று 161 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சார்பு ஆய்வாளர் செல்வம் என்பவர் என்னை விசாரித்து 03.09.2019 ம் தேதி விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார். மேற்படி பையினை நாங்கள் அத்தாட்சியில் கைப்பற்றினோம். அத்தாட்சியை எழுதியவர் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி உசிலம்பட்டியிலிருந்து கஞ்சா வாங்கி வந்ததை சொன்ன விவரத்தை ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்யப்படவில்லை. மகஜரில் நாங்கள் எதிரியிடம் கையொப்பம் வாங்கவில்லை. சம்பவ இடத்திற்கு நாங்கள் 3 பேருக்கு மேல் இருசக்கர வாகனத்தில் சென்றோம். யார் யார் சென்றோம் என்று ஞாபகம் இல்லை. கைப்பற்றிய பொருள்களை பிரிவு 57ன் படியான அறிக்கை என் உயர் அதிகாரிக்கு எழுதி அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நான் சொல்வது போல் ரகசிய தகவல் வந்ததாக சொல்வது பொய். அதன்பேரில் நான் ரைடுக்கு சென்றதாக எதிரியை அங்கு பார்த்தாகவும், எதிரியிடம் கஞ்சா கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேனா என்று ஞாபகம் இல்லை. சம்பவ இடம் பொதுமக்கள் நடமாடக்கூடிய இடம் இல்லை. நான் சொன்ன நேரத்தில் எதிரியிடம் கஞ்சா கைப்பற்றவில்லை எதிரிக்கு சோதனைக்கு குறித்து எதிரிக்கு எடுத்துக்கூறியதாகவும் சோதனை சம்மத கடிதம் பெற்றதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதம் சம்பவதன்று பெறப்பட்டிருந்தால் காவல் அடைப்பு செய்யும்போதே நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருப்போம் எஎன்றும் பின்னிட்டு சோதனை சம்மத கடிதம் தயாரிக்கப்பட்டதால் தான் அதனை உரிய காலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சா ியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், எதிரியை வீட்டிலிருந்தவரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து, வேறு நபரால் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து வைக்கப்பட்ட ஆவணங்களில் நான் மேஜை வேலையாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போதை பொருள் சட்ட விதிகளை முறையாக கடைபிடிக்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.